மணமக்களை வாழ்த்திய முதல்வர்

▶ சென்னையில் நடைபெற்ற கேரள உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மணிகுமாரின் மகள் சாகித்யா - சிவகுமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர்.

தேர்வுப்பணியில் ஈடுபட தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு தடை

தமிழக தேர்வுத்துறை உத்தரவு

சென்னை, மார்ச் 13: பிளஸ் 2 தேர்வு இன்று தொடங்குவதை அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள் உள்ளிட்ட யாரும் தேர்வுப் பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று தமிழக தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இயங்கும் மாநில பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு, இன்று முதல் பொதுத் தேர்வுகள் தொடங்குகின்றன.

தேர்வு மையங்களில் பள்ளிகளில் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்யக் கூடாது. அருகாமையில் 8 கிமீ தொலைவுக்கு மிகாமல் உள்ள பிற அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் தலைமை ஆசிரியர்களை, அரசுப் பள்ளிகளின் பணியாற்றும் மூத்த ஆசிரியர்களை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களாக நியமிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தனியார் பள்ளிகளின் முதல்வர்களையோ, துணை முதல்வர்களையோ, ஆசிரியர்களையோ எந்த தேர்வு மையத்துக்கும் கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்தல் கூடாது.

தனியார் பள்ளி தேர்வு மையங்களுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களையோ அல்லது அரசுப் பள்ளிகளின் மூத்த ஆசிரியர்களையோ தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களாக நியமிக்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்களே துறை அலுவலராக நியமனம் செய்யப்பட வேண்டும். தேவைப்படும் இடங்களில் மட்டும் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களை துறை அலுவலர்களாக நியமனம் செய்து கொள்ளலாம். ஒரு தேர்வு மையத்துக்கு நியமிக்கப்படும் முதன்மைக் கண்காணிப்பாளரும், துறை அலுவலரும் வெவ்வேறு பள்ளிகளை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். ஒரே பள்ளிகளை சேர்ந்தவர்களாக இருத்தல் கூடாது. ஒரு தேர்வு மையத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 500க்கு மேல் இருப்பின் ஒவ்வொரு 500 மாணவர்களுக்கும் ஒரு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் ஒரு கூடுதல் துணை அலுவலர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் 18 வயதுக்கு உட்பட்ட

18.74 லட்சம் பள்ளி மாணவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தகவல்

சென்னை, மார்ச் 13: தமிழ்நாட்டில் தற்போது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மொத்தம் எத்தனை பேர் பதிவு செய்துள்ளனர் என்ற விவரத்தை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வெளியிட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 28ம் தேதி நிலவரப்படி, 18 வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் 18 லட்சத்து 74 ஆயிரத்து 522 பேரும், 19 முதல் 30 வயது வரை உள்ள பல தரப்பட்ட கல்லூரி மாணவர்களை பொறுத்த வரையில் 28 லட்சத்து 9 ஆயிரத்து 940 பேரும் பதிவு செய்து உள்ளனர். 31 முதல் 45 வயது வரை அரசுப்பணி வேண்டி பதிவு செய்து காத்திருப்பவர்கள் 18 லட்சத்து 34 ஆயிரத்து 217 பேர். 46 முதல் 60 வயது வரை வயது முதிர்வு பெற்ற பதிவுதாரர்கள் 2 லட்சத்து 30 ஆயிரத்து 976 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 5 ஆயிரத்து 811 பேரும் வேலைக்காக பதிவு செய்து காத்து இருக்கின்றனர்.

மாற்றுத்திறனாளிகளை பொறுத்தவரையில் கை, கால் குறைபாடுடையோர் ஆண்கள் 72 ஆயிரத்து 983 பேரும், பெண்கள் 37 ஆயிரத்து 843 உள்பட ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 826 பேரும், பார்வையற்ற ஆண்கள் 12 ஆயிரத்து 47 பேரும், பெண்கள் 5,449 பேர் உள்பட 17 ஆயிரத்து 496 பேரும் பதிவு செய்து காத்திருக்கின்றனர். கை, கால் குறைபாடுடையோர் 74,230 ஆண்கள், 38,378 பெண்கள் என மொத்தம் 1,12,608 பேரும். காதுகேளாதோர் மற்றும் வாய் பேசாதோரில் ஆண்கள் 9 ஆயிரத்து 513 பேர், பெண்கள் 4 ஆயிரத்து 534 பேர் உள்பட 14 ஆயிரத்து 47 பேர் பதிவு செய்துள்ளனர். விழிப்புலனிழந்தோர் ஆண்கள் 12,218 பேர், பெண்கள் 5548 பேர் என 17,766 பேர், அறிவுதிறன் குறைபாடு மற்றும் இதர குறைபாடுடையோர் ஆண்கள் 1,044 பேர், பெண்கள் 349 பேர் என 1393 பேர் பதிவு செய்துள்ளனர். அதேபோல், பட்டதாரி ஆசிரியர்கள் 3 லட்சத்து 39 ஆயிரத்து 996 பேரும், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 2 லட்சத்து 49 ஆயிரத்து 826 பேரும், இளநிலை பொறியியல் படித்தவர் 2,92,396 பேரும், முதுநிலை பொறியியல் படித்தவர்கள் 2,58,662 பேரும் என மொத்தம் 67 லட்சத்து 55,466 பேர் பதிவு செய்து காத்துள்ளனர். இவர்களில் 31 லட்சத்து 47,605 பேர் ஆண்கள். 36 லட்சத்து 7,589 பேர் பெண்கள். 272 பேர் 3ம் பாலினத்தவராவர்.

பிளஸ் 2 தேர்வு எழுதும் மாணவர்களுக்கு டிஜிபி சைலேந்திரபாபு டிப்ஸ்

சென்னை, மார்ச் 13: தமிழ்நாட்டில் பொதுத் தேர்வு எழுதும் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி டிஜிபி சைலேந்திரபாபு, நேற்று வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் அவர் கூறியிருப்பதாவது:

நீங்கள் நாளைக்கு தேர்வு எழுத செல்லும்போது, உங்கள் அம்மா, அப்பாவிடம் ஆசீர்வாதம் வாங்கி புறப்படுங்கள். புறப்படும் போது, ஒரு பேனாவுக்கு பதில் 2 பேனா, 1 பென்சிலுக்கு பதில் 2 பென்சில் எடுத்து செல்லுங்கள்.

தேர்வுக்கு செல்லும் போது, மோட்டார் பைக் மற்றும் கார், பஸ்சில் செல்லும்போது அவசர அவசரமாக படிக்காதீர்கள். கடைசி ஒரு மணி நேரத்தில் படிக்கும் போது, நமக்கு பயம் அதிகமாகும்.

கேள்விகளை நன்றாக படித்து பார்த்து பதில் எழுதுங்கள். கடினமான கேள்விகளை விட்டுவிடுங்கள். அதன் பிறகு தெரியாத கேள்விகளுக்கு ஒவ்வொன்றாக பதில் எழுதுங்கள். அதிலும், ஒரு கேள்வி அதிக கடினமாக இருக்கிறது என்றால், அதை எழுதாதீர்கள்; அதை விட்டுவிட்டு மற்ற கேள்விகளுக்கு செல்லுங்கள். எல்லா கேள்விகளையும் முடித்த பிறகு உங்களுக்கு நேரம் இருக்கிறது. இப்போது இரண்டரை மணி நேரம் தான் ஆகியுள்ளது என்றால், உடனே அறையை விட்டு வெளியே வராதீர்கள். அந்த அரை மணி நேரத்தில் எல்லா கேள்விகளுக்கும் விடையளித்து இருக்கிறோமா. அவை, சரியா அல்லது கூடுதலாக ஏதாவது சேர்க்க வேண்டுமா என்பதை ஒரு முறை சரி பாருங்கள்.

அப்படி 3 மணி நேரமும் தேர்வு எழுதி முடித்த பிறகு வெளியே வர வேண்டும். வெளியே வந்த பிறகு தேர்வு சரியாக எழுதி இருக்கிறோமா. தவறாக எழுதி இருக்கிறோமா என்று புத்தகத்தை திறந்து பார்த்து சரி பார்ப்பது, எவ்வளவு மார்க் நமக்கு கிடைக்கும் என்பதை பற்றி எல்லாம் சிந்திக்காதீர்கள். நேராக வீட்டிற்கு போய், ஒரு மணி நேரம் நல்லா ஓய்வு எடுங்க.

அதுக்கு பிறகு அடுத்த தேர்வுக்கு தயாராகுங்கள். தீவிரமாக படிக்க தொடங்குங்கள். அடுத்த தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுங்கள். உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள். நிறைய மார்க்குகள் உங்களுக்கு கிடைக்கட்டும்.

இவ்வாறு டிஜிபி சைலேந்திரபாபு மாணவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

TATA

டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட்

பதிவு முகவரி: 11வது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400013. கிளை முகவரி: டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024...

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட் (டிசிஎச்எல்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்" & "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 29–03–2023 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழேக் குறிப்பிடப்பட்டுள்ளன. அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுவதாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ நிறுத்தும் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–03–2023 நாளில் பிற்பகல் 2 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டா. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 28–03–2023 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்..

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்" ஆனதாகும்;

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ জামின்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
1	TCHHL04 04000100 000348	திரு. ஹரிஹரன் K. திருமதி உமா கோதண்டபாணி	₹45,88,916/– (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்தெட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினாறு மட்டும்) & 29–06–2021	₹32,50,000/– (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	₹3,25,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தைந்து ஆயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: அட்டவணை 'அ' **சொத்து (முழு சொத்து) இனம் எண் 1:** கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள, வண்டலூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள, பழைய ச. எண் 261A/3, பட்டா எண் 2120, பட்டாப்படி புதிய ச. எண் 261A/3A69 இல் அடங்கிய, டி.எஸ். நகரில், மனை எண் 129C என்ற, 2020 சதுரடி விஸ்தீரணம் காலி நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்:– **வடக்கில்:** மனை எண் 129 **தெற்கில்:** காலி நிலம் **கிழக்கில்:** மனை எண் 129B **மேற்கில்:** மனை எண் 130A விஸ்தீரணம்:– கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 40 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 40 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 48 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 53 அடி அனைத்தும் விஸ்தீரணம் 2020 சதுரடி.
இனம் எண் 2: கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள, வண்டலூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள, பழைய ச. எண் 261A/3, பட்டா எண் 1039, பட்டாப்படி புதிய ச. எண் 261A/3A51 இல் அடங்கிய, டி.எஸ். நகரில், மனை எண் 129 என்ற 2000 சதுரடி விஸ்தீரணம் காலி நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:– வடக்கில்:** சாலை **தெற்கில்:** மனை எண் 129C **கிழக்கில்:** மனை எண் 129A **மேற்கில்:** மனை எண் 130A **விஸ்தீரணம்:–** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 40 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 40 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 50 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 50 அடி அனைத்தும் விஸ்தீரணம் 2000 சதுரடி. இனம் எண் 1 & 2,ஆகியவற்றின்படி (மனை எண்கள் 129C மற்றும் 129) அனைத்தும் விஸ்தீரணம் 4020 சதுரடி மட்டும்.
அட்டவணை 'ஆ' சொத்து (உரிமை மாற்றப்படுவதற்கு திட்டமிட்ட பாகம் பிரிக்கப்படாதப் பங்கு) அட்டவணை அ சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 361 சதுரடி.
அட்டவணை 'இ' சொத்து "சிசி அல்பைன்–A பிளாக்" ஆக அறியப்படும் அடுக்ககத்தில் (பொதுப் பரப்புகள் உட்பட) 901 சதுரடி விற்கத்தக்கப் பரப்பு கொண்டிருக்கும், தரை தளத்தில், ஃபிளாட் எண் G1.

2	9712634	திருமதி அபிதா பேகம் R (கடன்தாரர்). N. இராஜா முகமது (உப–கடன்தாரர்),	₹81,59,605/– (ரூபாய் எண்பத்தொன்று இலட்சத்து ஐம்பத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று ஐந்து மட்டும்) & 10–07–2018	₹22,90,000/– (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)	₹2,29,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தொன்பது ஆயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: சொத்து எண் 1 எஜிஎஸ் கேலக்சி அபார்ட்மெண்ட்ஸ் ஆக அறியப்படும் திட்டத்தில் ஒரு மேற்கூரையிட்ட கார் நிறுத்துமிடத்துடன் அடிமட்டப் பரப்பு 690 சதுரடி விஸ்தீரணம் A பிளாக், இரண்டாம் தளம், எண் AS–1 என்ற ஃபிளாட்டுடன் சேர்த்து 11 சென்ட்களுள் 9.3 சென்ட்கள் அல்லது 4055 சதுரடி விஸ்தீரணம் பழைய ச. எண் 41/1 முந்தையது 41/1B2A2 (பகுதி), டி.எஸ். எண் 88, பிளாக் எண் 13, வார்டு எண் A இல் அடங்கிய பழைய கதவு எண் 46, புதிய எண் 33, பழைய பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, ஈசா பல்லாவரம் கிராமம், ஆலந்தூர் வட்டம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் சொத்தினுள் 470 சதுரடி விஸ்தீரணம் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கின் அனைத்து துண்டு மற்றும் பகுதி மேலும் நிலங்கள் எல்லைகள் **எல்லைகள்:– கிழக்கில்:** திரு. போகன், திரு. அண்ணாமலை, திரு. முருகன் மற்றும் திரு. இராமமூர்த்தி ஆகியோருக்கு சொந்தமான நிலம், **மேற்கில்:** பெரியபாளையத்தம்மன் கோயில் சாலை, **வடக்கில்:** கூரிய பாய் அம்மாள் மற்றும் பிறருக்கு சொந்தமான நிலம், **தெற்கில்:** டி.எஸ். எண் 90 மற்றும் 91.

3	9520146	திருமதி நிவேதா K திரு. கலியபெருமாள் M P	₹41,04,755/– (ரூபாய் நாற்பத்தொன்று இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து மட்டும்) & 12–08–2022	₹29,85,000/– (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து எண்பத்தைந்து ஆயிரம் மட்டும்)	₹2,98,500/– (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்றெட்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: அட்டவணை–அ குன்றத்தூர் கிராமம், குன்றத்தூர் பேரூராட்சி, ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள (இன்னும் குறிப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள) பரப்பளவில் சர்வே எண்களில் அடங்கிய நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி.

வரிசை எண்	சர்வே எண்	பரப்பளவு சென்ட்களில்	எல்லைகள் வடக்கில் சர்வே எண்(கள்)	தெற்கில் சர்வே எண்(கள்)	கிழக்கில் சர்வே எண்(கள்)	மேற்கில் சர்வே எண்(கள்)
I	707/1A	103	628	708/1, 708/3 & 707/3	628, 707/1B & 707/3	628 & 721/2
II	707/1B	120	628	707/3	675 & 628	707/1A
III	707/3	187	707/1A &707/1B	709 & 706	675 & 676	708/3 & 707/1A
IV	708/3	93	707/1A & 707/3	709	707/3 & 709	708/1, 708/2 & 718/1
V	727/1A & 1B	67	727/2	726/2 & 625	625	728/1
VI(a)	709 பகுதி	708/3 & 707/3	708/3 & 707/3	ச. எண் 709 பகுதியில் திட்டமிட்ட 9 மீ. அகலம் இணைப்பு சாலை	706	708/3 & 718/1
(b)	709 பகுதி	39.45	ச. எண் 709 பகுதியில் திட்டமிட்ட 9 மீ. அகலம் இணைப்பு சாலை	710/1	709 பகுதி	710/1, 712 & 718/1
VII	726/1 & 2	82	727/1A, 727/1B & 728/1	725 & 625	625 & 725	728/1
VIII (a)	721/1	69	723/1, 725	720/1 & 719/1	725 & 721/2	721/1, 722 & 720/1
(b)	721/2	152	725	719/1 & 708/1A	628 & 707/1A	721/1, 719/1 & 725
IX	710/1	37	709 பகுதி	710/2	710/2	712
X	734 பகுதி	0.4	728/2 பகுதி	724	728/2 பகுதி	ச. எண் 734 பகுதியில் திட்டமிட்ட 12 மீ. அகலம் இணைப்பு சாலை
XI	616/1	16	615/3 & 616/2	727/2	617	616/2 & 615/2
XII	728/1	250	728/3 728/4, 613/2 & 615/2	726/1, 726/2, 725 & 727/2	727/1A, 727/2, 726/1 & 728/4	728/2 & 725
XIII	727/2	129	616/1 & 728/1	727/1A, 727/1B & 624	624, 625 & 617	728/1
XIV	728/2 பகுதி	177.02	613/2	724 & 734	613/2, 728/1 & 724	ச. எண் 734 பகுதி, 728/2 பகுதி மற்றும் 724 இல் திட்டமிட்ட 12 மீ. அகலம் இணைப்பு சாலை

இனம் எண் I முதல் XIV வரை, விஸ்தீரணம் மொத்தப் பரப்பளவு 15 ஏக்கர் மற்றும் 55.02 சென்ட்கள் தெற்கு சென்னை பதிவு மாவட்டத்திற்குள் மற்றும் குன்றத்தூர் சார்–பதிவாளர் அலுவலகம். **அட்டவணை–ஆ அட்டவணை–அ** இல் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு விஸ்தீரணம் பரப்பளவு 234 (இருநூற்று முப்பத்து நான்கு) சதுரடி நிலம் உரிமம், உரிமைப் பத்திரம் மற்றும் உரிமை.
அட்டவணை–இ (உள்ளடக்கக் கட்டிடப் பரப்பு 911 சதுரடியுடன் (பொது கட்டுமானப் பரப்பில் விகிதாச்சார பாகம் பிரிக்கப்படாதப் பங்கு உட்பட "டெம்பிள் வேய்ஸ்" குடியிருப்புப் பணித்திட்டத்தின்) நிலை எண் 1, பிளாக் எண் C, 4வது தளத்தில் அபார்ட்மெண்ட் எண் C402

4	10136326	திரு. சதாசிவம் A. திருமதி பார்வதி S திரு. ஆறுமுகம் N திரு. அருண் S	₹25,44,455/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நானூற்று ஐம்பத்தைந்து மட்டும்) & 22–06–2019	₹21,50,000/– (ரூபாய் இருபத்தொன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	₹2,15,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினைந்து ஆயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: எண் 85, கோவூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சீபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள, ப.ச. எண் 195 (பகுதி), பட்டா எண் 3214, பட்டாப்படி புதிய சர்வே எண் 195/2A இல் அடங்கிய, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ற படப்பை, திட்ட அனுமதி எண் 1183/2013, D.Dis No.3050/13/A3, நாள் 21.11.2013 மூலம் அனுமதிபெற்ற மனைப்பிரிவு, மனை எண் 3B என்ற காலி வீட்டு மனையின் அனைத்து துண்டு மற்றும் பகுதியின் அனைத்து துண்டு மற்றும் பகுதி, விஸ்தீரணம் பரப்பளவு 1330 சதுரடி **எல்லைகளாக: வடக்கில்:** சர்வே எண் 196, தெற்கில்: சாலை, **கிழக்கில்:** மனை எண் 4B, **மேற்கில்:** மனை எண் 2B, **விஸ்தீரணம்:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 35 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 35 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 38 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 38 அடி. அனைத்தும் விஸ்தீரணம் பரப்பளவு 1330 சதுரடி நிலம், மேலும் குன்றத்தூர் சார்–பதிவு மாவட்டம், மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் மேலும் கோவூர் கிராம ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. **அட்டவணை–ஆ அட்டவணை 'அ'** சொத்தினுள் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 340 சதுரடி.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, தவறினால் அசையாச் சொத்து அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையை கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது. விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்:
குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://bankauctions.in/ இணையை முகப்பு மூலம் 29–03–2023 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:
1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழேக் கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும்.
2. அசையாச் சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.
3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: **₹10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)**
4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் "டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிட்." பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பிவிளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.
5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும்.
6. பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும்.
7. முன் அனுமதியில் 20–03–2023 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.
8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும்.
9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின்